**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | CC. 32 of 2020 |
| Prosecution Witness | : | PW1 |

11.08.2025.

| | | | |
|---|---|---|---|
| Name | : கோபிநாத் | Calling | : கணக்காளர் |
| Father Name | : ரெங்கராஜ் | Religion | : |
| Village | : கரட்டாம்பட்டி | Age | : 27 |
| Taluk | : துறையூர் | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்

**முதல் விசாரணை**

நான் தற்போது கரட்டாம்பட்டியில் குடியிருந்து கணக்காளராக வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்துபோன விமல்ராஜ், நந்தகுமார் ஆகியோரை தெரியும். விபத்தில் காயம்பட்ட விஜயையும் தெரியும். நான் கடந்த 12.11.2018 அன்று மதியம் கல்லூரி முடித்துவிட்டு மதியம் 12.45 மணியளவில் புத்தனாம்பட்டி – கரட்டாம்பட்டி ரோட்டில், இலுப்பையூர் Childrens Home அருகே நான் நடந்து வந்து கொண்டிருந்தேன். அப்போது TN 48 X 6816 என்று TVS XL இருசக்கர வாகனத்தை நந்தகுமார் ஓட்ட அவருக்கு பின்னால் விமல்ராஜும், அவருக்கு பின்னால் விஜயும் உட்கார்ந்து வந்தார்கள். கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி மேற்படி ரோட்டில் வந்து கொண்டிருந்த பொழுது, அந்த ரோட்டில் சாலை பணிகள் நடந்து கொண்டிருந்தது. அந்த ரோட்டில் எச்சரிக்கை போர்டு எதுவும் இல்லை. ரோட்டில் பணி செய்தவர்கள் வழக்கமாக பள்ளம் தோண்டும் இடத்திற்கு அருகிலேயே மண்ணை கொட்டி வைப்பார்கள். அன்றையதினம் வலது புறத்தில் மண்ணை தோண்டி இடதுபுறமுள்ள இடத்தில் கொட்டினார். TN 45 BM 4699 என்ற JCB யை ஓட்டியவர் பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்தவர்களை கவனிக்காமல் மண்ணை இடதுபுறமாக கொட்டுவதற்கு JCB

வண்டியின் முன் பகுதி பக்கெட்டை திருப்பியபோது, பின்னால் வந்த இருசக்கர வாகனத்தில் மோதி இருசக்கர வாகனத்தில் வந்தவர்களில் இருவர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார்கள். விஜய்க்கு இடது தாவாங்கட்டையில் பலத்த காயம் ஏற்பட்டது. பின்னர் விஜயை இருசக்கர வாகனத்தில் திருச்சிக்கு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். விமல்ராஜ் மற்றும் நந்தகுமார், விஜய் ஆகியோர்களுக்கு தகவல் தெரிவித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அந்த புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** JCB யை ஓட்டியவர் விபத்து ஏற்பட்டவுடன் ஐந்து நிமிடத்தில் ஓடிவிட்டார். அவரை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –

நான் காலையில் கல்லூரி செல்வேன். கல்லூரி காலை 09.30 மணிக்கு ஆரம்பித்து, மாலை 03.30 மணிக்கு முடியும். சம்பவத்தன்று கல்லூரிக்கு பைக்கில் சென்றேன். சம்பவத்தின் போது விபத்தில் காயம்பட்டவர்கள் பின்னால் இருசக்கர வாகனத்தில் நான் வந்து கொண்டிருந்தேன். மேற்படி விமல்ராஜ், நந்தகுமார், விஜய் ஆகியோர் எனது கல்லூரியில் படித்தார்கள். மேற்படி மூவரும் வந்த வாகனம் TVS XL வாகனம். நந்தகுமார் எவ்வளவு வேகத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் 40– 45 கிலோ மீட்டர் ஆகும். விமல்ராஜ் சுமார் 45 கிலோ எடை இருப்பார். விஜய் 45 – 50 கிலோ எடை இருப்பார். எதிரி JCB வாகனத்தை இயக்கும்போது அவரது முகம் மேற்கு நோக்கி இருந்தது. கரட்டாம்பட்டி – புத்தனாம்பட்டி சாலை விபத்து நடந்தபோது குண்டும் குழியுமாக இருந்ததா என்றால் இல்லை. JCB சாலையின் வலதுபுறம் நின்று கொண்டிருந்தது. எனக்கும் மேற்படி நந்தகுமார் சென்ற இருசக்கர வாகனத்திற்கும் சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும். விபத்து நடந்தபோது நான் மட்டும் தான் இருந்தேன். மற்றவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்தார்கள்.

**இருசக்கர வாகனத்தில் வந்தவர்கள் சாலை விதிகளை மீறி மூன்று பேர் பயணம் செய்ததால் வண்டியில் பேலன்ஸ் செய்ய முடியாமல் முன்னால் இருந்த JCB வாகனத்தை கவனிக்காமல் மோதி விபத்தை ஏற்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. காயம்பட்ட நபர்களின் கல்லூரி அடையாள அட்டையில் உள்ள அவர்களது பெற்றோரின் செல்போன் நம்பர்களை எடுத்து அவர்களுக்கு தகவல் தெரிவித்தேன். 108 ஆம்புலன்ஸுக்கு நான் தான் தகவல் தெரிவித்தேன். நந்தகுமார், விமல்ராஜ் ஆகியோர் துறையூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள். விஜய் திருச்சி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். விபத்து நடந்து முக்கால் மணி நேரம் வரை நான் சம்பவ இடத்தில் இருந்தேன். காவல் நிலையத்திற்கு நான் தான் தகவல் தெரிவித்தேன். போலீசார் உடனே வந்துவிட்டார்கள். சம்பவ இடத்திலேயே புகாரை நான் சொல்ல சொல்ல போலீசார் எழுதினார்கள். படித்து பார்த்து கையெழுத்து செய்தேன். விஜய்க்கு தாவாங்கட்டையில் Fracture. வேறு எங்கு காயம் ஏற்பட்டது என்று நான் கவனிக்கவில்லை. மேற்படி விபத்தை நான் பார்க்கவில்லை என்றும், விபத்தில் இறந்தவர்கள் எனது கல்லூரியை சேர்ந்தவர்கள் என்பதால், அவர்களது குடும்பத்திற்கு விபத்து நஷ்டஈடு பெற்றுத்தருவதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. போலீசார் காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள்.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/-அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்